DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | STC 379/2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | தெய்வசிகாமணி |
| Father Name | : | முத்துசாமி கவுண்டர் |
| Age | : | 75 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.07.2025.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது ஆனால் கையொப்பம் செய்ய தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு சுமார் 25 ஆண்டுகளாக தெரியும். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு நான்கு ஏக்கர் வயலும் மூன்று ஏக்கர் தோட்டமும் உள்ளது. அதில் எனக்கு மாதம் ரூபாய் பத்தாயிரம் வருமானம் கிடைக்கும் என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. எனக்கு வேறு எந்த தொழிலும் கிடையாது. எனக்கு வேறு எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான்.

2. ஆஜர் எதிரி மின்சார வாரியத்தில் போர் மேனாக உள்ளார். நான் எனது பிரமாண வாக்குமூலத்திலோ புகாரிலோ எதிரி போர் மேனாக உள்ளார் என்பதையும் அதேபோல் அவரை எனக்கு 25 ஆண்டுகளாக தெரியும் என்பதையும் சொல்லவில்லை என்றால் அதனை வழக்கறிஞர் தான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். எதிரி எந்த முகவரியில் வசித்து

வருகிறார் என்று தெரியுமா என்றால் விஜயமங்கலம் ரோட்டில் உள்ள காக்காபள்ளம் என்ற ஊரில் வசித்து வருகிறார்.

3. எதிரி எப்போது என்னிடம் தனக்கு பணம் வேண்டும் என்று எனது வீட்டிற்கு வந்து கேட்டார் என்றால் 2023, மார்ச் மாதம் 10 அல்லது 11 தேதியில் கேட்டார். அப்போது எனது வீட்டில் எனது மனைவி மற்றும் மருமகள் இருந்தார்கள். நான் இந்த விவரத்தை புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலைக்கு முன்னதாக எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த வரவு செலவும் இருந்தது இல்லையா என்றால் அதற்கு முன்னரும் வரவு செலவு இருந்து வந்தது, பணம் வாங்கிக்கொண்டு திருப்பி செலுத்தியுள்ளார்.

4. எதிரி என்னிடம் ரூபாய் 10 லட்சம் பணம் கேட்டிருந்தார். நான் பணத்தை ஏற்பாடு செய்து விட்டு எதிரிக்கு போன் செய்து கையில் ரூபாய் 7,20,000/- இருக்கிறது வேண்டுமென்றால் பின்னர் மீதத் தொகையை ஏற்பாடு செய்து கொடுப்பதாக கூறினேன். மறுநாள் வரும்போது காசோலை எழுதிக் கொண்டுவருமாறு சொன்னேன். காசோலையில் உள்ள விவரங்கள் யாரால் எழுதப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது. என் முன்னால் காசோலையில் கையொப்பம் செய்தார்.

5. எதிரி எனது வீட்டிற்கு காலை 08.30 மணியளவில் வந்தார். அப்போது எதிரி உடன் வேறு யாரையும் அழைத்து வரவில்லை. இந்த வழக்கு காசோலையை தவிர நான் வேறு எதுவும் வாங்கவில்லை. நான் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை, கைமாற்றாக தான் கொடுத்தேன். காசோலை எந்த மொழியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது

என்றால் தமிழில் எழுதி இருந்தது. கையொப்பம் ஆங்கிலத்தில் செய்தாரா அல்லது தமிழில் செய்தாரா என்று தெரியவில்லை.

6. எதிரி எனக்கு கொடுத்த காசோலை 2012ல் அச்சடிக்கப்பட்ட காசோலை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு கொடுத்த தொகையை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை கையில் இருப்பு வைத்திருந்த தொகையில் தான் கொடுத்தேன். என்னிடம் பணம் வாங்கிய அன்றே இந்த வழக்கு காசோலை வழங்கப்பட்டது என்றால் சரிதான். காசோலையில் போட்ட தேதி 23.04.2023 என்றால் சரிதான். எதிரிக்கு என்னிடம் அவ்வளவு தொகையை பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் எதிரிக்கு போதிய பண வசதி உள்ளது என்றாலும் சரியல்ல, அவருக்கு வீட்டு வேலை நடந்து கொண்டிருந்தது.

7. நான் சொன்ன தேதியில் எதிரி எனக்கு இந்த வழக்கு காசோலை கொடுக்கவில்லை என்றாலும், எதிரி என்னிடம் இருந்து எந்தத் தொகையும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 23.04.2023 தேதிக்கு பின்னிட்டு எங்களுக்குள் வரவு செலவு எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கூட எதிரி எனக்கு ரூபாய் மூன்று லட்சம் திருப்பி செலுத்தி உள்ளார்.

**(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.07.03 19:02:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.